தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2025

**18 - 22 வயதுப்பிரிவு**
(01.01.2003 – 31.12.2007 வரையில் பிறந்தோர்)

## தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

தமிழீழத்தின் பொருண்மியத் திட்டமிடல்களை உருவாக்கி, தமிழர் தாயகத்தின் மீது சிறிலங்கா அரசு விதித்திருந்த பொருளாதாரத் தடைகளை உடைத்தெறிந்து, பசியினால் ஒருவர் கூட இறந்து போகாமல் பாதுகாத்து, தற்சார்புப் பொருண்மியத்தை நிறுவி, தமிழீழத்தையும் மக்களையும் காத்து நின்ற பெருவிருட்சமே தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம். தமிழீழத்தின் பெருவளங்களை ஒன்றுதிரட்டி, மனிதவலுவை பொருண்மியச் சிந்தனை வழியில் நகர்த்தி, வளங்களை உச்சமாகப் பயன்படுத்தும் சிறப்பான திட்டமிடல்களை இது நடைமுறைப்படுத்தியது. எரிபொருள், மின்சக்தி வசதியற்ற சூழலை எதிர்கொள்ள இயற்கையின் துணைகொண்டு வழிகாட்டிய அமைப்பு.

தமிழர் தாயகம் பொருண்மியத்தில் உயர்ந்து நின்று தன்னிறைவு காண வழிகாட்டிய தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமானது உருவாக்கம் பெற்று முப்பத்தைந்து ஆண்டுகளை நிறைவுசெய்துள்ளது. மிகநுட்பமான பொருண்மியத் திட்டங்களால் போரோடு பொருண்மியத்தையும் சிறப்பாக முன்னகர்த்தியவர் எமது தமிழீழத் தேசியத்தலைவர் அவர்கள். உள்ளூர் உற்பத்திகளை அறிமுகம் செய்து, அவற்றை மேம்படுத்துவதற்கான கருத்தரங்குகளை நடாத்தி, இயற்கையான பசளைகளையும் மரபுவழி விதையினங்களையும் வழங்கி எமது மக்களின் உணவுத்தேவையை நிறைவாக்கியதோடு வாழ்வாதாரத்தையும் கட்டியெழுப்பிய பெருமை தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தையே சாரும்.

தமிழீழத்தின் கடல்வளத்தைக் கொண்டு பல்வேறு தொழில்வாய்ப்புகளை உருவாக்கி நெறிப்படுத்தியதோடு, பனம்பொருள்களுக்கான உற்பத்திக்கு ஊக்கமளித்து அவற்றை ஏற்றுமதி செய்யும் அளவுக்கு உயர்த்தியது. உணவு பதனிடும் தொழிலுக்கு முதன்மை கொடுத்து, அதற்கான தொழிற்சாலைகளை அமைத்து எமது தாயகத்தின் பருவகாலப் பழங்கள், காய்கறிகள், மீன் வகைகளைப் பதனிட்டு மக்களின் நீண்டகாலப் பயன்பாட்டுக்கு இந்நிறுவனம் வழங்கியது. வேளாண் தொழிலை ஊக்குவிப்பதற்காகத் தேசியத்தலைவர் உழவர்களுக்கு ‘வேளாண் மன்னர்’ விருது வழங்கி மதிப்பளித்தார்.

நீர் மேலாண்மையை சரியாகத் திட்டமிட்டு மழைநீரைச் சேமித்து பயன்படுத்தும் திட்டங்களை பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடைமுறைப்படுத்தியது. பசுமை திட்டத்தின் மூலம் பயன்தரு மரங்கள் வளர்க்கப்பட்டதோடு காடழிப்பையும் தடுத்து எமது மண் வளத்தைப் பேணியது. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் செயற்பாடுகள் மக்களது அன்றாட வாழ்வியலுக்கானது மட்டுமன்றி, நீண்டகால நோக்கில் சுதந்திர தமிழீழத்தின் தன்னிறைவையும் ஏற்றுமதிகளையும் அடிப்படையாகக் கொண்டது.

இன்று எமது தாயகத்தின் தன்னிறைவான உற்பத்திப் பொருள்கள் இறக்குமதிப் பொருள்களாக மாற்றமடைந்திருக்கின்றன. எமது மக்கள் அன்றாட வாழ்வுக்குக் கையேந்துபவர்களாக மாற்றப்பட்டுள்ளார்கள். எம் மண்ணின் விளைநிலங்கள் இராணுவ முகாம்களாகவும் சிங்களக் குடியேற்றங்களாகவும் பறிக்கப்பட்டுள்ளன. உயிர்கொல்லும் வேதியல் கலவைகள் அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன. இவை யாவும் தமிழின அழிப்பு வடிவங்களே!

எனவே, இளையோர்களாகிய நாம் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் திட்டங்களை ஆய்வு செய்வதோடு, இன்றைய தொழில்நுட்ப வளங்களை ஒருங்கிணைத்து, ஏற்றுமதி ஊடாக எமது தாயகத்தின் உற்பத்திகளை உலகம் முழுவதும் சேர்ப்போம். தமிழீழப் பொருண்மியம் உயர உழைப்போம்.

நன்றி, வணக்கம்.